செ.கு.எண் - 61

நாள்:- 9-2-12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 9.2.2012

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், பாவடரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முனிய கவுண்டர் என்பவரின் மகன் மூகப்பன் என்கிற மல்லன் 9.2.2012 அன்று காட்டு யானை தாக்கியதில், பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த மூகப்பன் என்கிற மல்லன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான மூகப்பன் என்கிற மல்லனை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர் 2/4

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9